சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2009
ஆனி 7
றஜப். 14
புதன் (21-6-1978)
நிறுவியது 1947
புத்தகம் 32
இதழ் 6
யாழ். தொ.பே.இல. 352
விலை சதம் 35



# "நாம் கோருவது பிரிவினையல்ல! எமது நாட்டின் விடுதலைக்கே போராடுகிறோம்"

## இந்தியப் பிரதமருக்கு கதிரவேற்பிள்ளை பதில்!

"இலங்கைத் தமிழ் மக்களின் பிரிவினைக்கோரிக்கையை தாம் எதிர்ப்பதாக இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் லண்டனில் பத்திரிகை நிருபர்கள் மாநாட்டில் கூறியிருக்கிறார். நமது கோரிக்கையின் உண்மையான நிலையை விளங்கிக் கொள்ளாமலே, அவர் இவ்வாறு கூறியிருப்பதாக நான் கருதுகிறேன். நாம் கோருவது பிரிவினையல்ல—நமது தமிழ் ஈழ நாட்டின் சுதந்திரத்தையே கோருகிறோம். சிங்கள சிறிலங்காவும், தமிழ் ஈழமும் சட்டப்படியும், சரித்திரப்படியும் இரண்டு வெவ்வேறு நாடுகளே தவிர ஒரே நாடு அல்ல—இந்த உண்மையை இந்தியப்பிரதமர் தேசாயுட்பட அனைவரும் விளங்கிக்கொள்ள வேண்டும்".

மேற்கண்டவாறு வேலணையில் நடைபெற்ற அமரர் வி. ஏ. கந்தையா நினைவு தினக்கூட்டத்தில் பேசிய கோப்பாய் பா. உவும் கூட்டணியின் மூத்த தலைவர்களின் ஒருவருமான திரு.சி. கதிரவேற்பிள்ளை குறிப்பிட்டார்.

பண்டிதர் கா. பொ. இரத்தினம் பா. உ 'தலைமையில் நடைபெற்றஇக்கூட்டத்தில் திரு. கதிரவேற்பிள்ளை மேலும் கூறியதாவது.

### தேர்தல் தீர்ப்பு

"1977 ஆடிப் பொதுத் தேர்தலில் தமிழ் ஈழத்திலுள்ள 19 தமிழ்த் தொகுதிகளில் 18 தொகுதிகளில் நாம் வெற்றி பெற்றோம். ஆக ஒரே யொரு தொகுதியிலேயே நாம் சிலநூறு வாக்குகளால் வெற்றிவாய்ப்பை இழந்தோம். இந்தத்தேர்தலை நாம் ஒரு பொதுசன வாக்கெடுப்பு என்று உலகத்துக்கு அறிவித்தோம். தமிழ் ஈழம் தனது சுதந்திரத்தை நிலை நாட்டிக்கொள்வதில் பிடிவாதமாகவும், உறுதியுடனும். ஒன்றுபட்டும் நிற்கிறது என்பதை இந்தத் தேர்தல் முடிவுகள் உலகம் முழுவதும் பறைசாற்றியது. தமிழ் மக்கள் வேறு சிந்தனைகளை ஒதுக்கிவிட்டு, சுதந்திரம் ஒன்றுக்காகவே தங்கள் வாக்குகளைப் பிரயோகித்தார்கள்.

"உடுப்பிட்டித் தொகுதியில் சாதிக்கும் தீண்டாமைக்கும் எதிராக நாம் ஈட்டிய வெற்றியே இதில் தலைசிறந்து விளங்கியது. இதற்கு முன்னர்உடுப்பிட்டித்தொகுதியில் வெற்றிபெற்றவர்கள் எடுத்திராத ஆகக்கூடிய பெரும்பான்மை வாக்குகளால், தமிழ்மக்கள் திரு. இராசலிங்கத்துக்கு வாக்களித்து சாதியை சாகடித்தார்கள்.

1977 ஆடிப்பொதுத் தேர்தலின் பின்புதான் தமிழ் மக்களின் சுதந்திர



அபிலாஷையை சிங்களவர்களும் உலகமும் மிகவும் தெளிவாக அறிந்து கொண்டனர். தேர்தல் முடிவடைந்த பின்னர், இலங்கையின் பாராளுமன்ற வரலாற்றில் முன் எப்போதும் கண்டிராத ஒரு புதுமை, ஒரு புரட்சி ஏற்பட்டது. தேசிய அரசுப் பேரவையில் ஒரு சிங்கள ஆளுங்கட்சியும்,தமிழ்எதிர்க்கட்சியும் முதற்தடவையாக அமைந்தது. இதனால், இலங்கையின் உண்மையான நிலையை உலகு அறியும் வாய்ப்பு ஏற்பட்டது.

### தமிழ் எதிர்க்கட்சி

எதிர்க்கட்சித் தலைவராக இருப்பவரை இங்கு வரும் வெளிநாட்டு அரசியல் தலைவர்கள், இராசதந்திரிகள், பத்திரிகையாளர்கள் சந்திப்பது வழக்கம்; சம்பிரதாயம். அவர்கள் எல்லாம் எதிர்க்கட்சித்தலைவரை சந்திக்கி

—4-ம் பக்கம் பார்க்க

## அமிருக்கு மட்டக்களப்பில் மாபெரும் வரவேற்பு அளிக்க ஏற்பாடு!

எதிர்க்கட்சித்தலைவர் பொறுப்பை ஏற்ற பின்னர், முதன் முதலாக மட்டக்களப்புத் தொகுதிக்கு 24.6.78ல் வருகை தரும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களுக்கு மட்டக்களப்பில் பிரமாண்டமான வரவேற்பை அளிப்பதற்கு மட்டக்களப்பு தமிழ் இளைஞர் பேரவையும், கூட்டணி பிரமுகர்களும் சிறப்பான ஏற்பாடுகளைச் செய்துள்ளனர். கொழும்பிலிருந்து 24.6.78 காலை மட்டக்களப்பு வந்து சேரும் தலைவருக்கு மட்டக்களப்பு இதுவரையில் காணாத அளவுக்கு மிகச் சிறந்த வரவேற்பு அளிக்கப்படவுள்ளது.

## பொதுச்சபை மட்டக்களப்பில் கூடுகிறது!

புதிய அமைப்புத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட தமிழர் விடுதலைக்கூட்டணியின் முதலாவது பொதுச்சபைக் கூட்டம், 24ம், 25ம் திகதிகளில் இரு நாட்களுக்கு மட்டக்களப்பில் நடைபெறுகிறது. மட்டக்களப்பு தாமரைக்கேணியிலுள்ள திரு. பூ. கணேசலிங்கத்தின் இல்லத்தில் நடைபெறும் இப் பொதுச்சபைக் கூட்டத்தில் சுமார் 150 உறுப்பினர்கள் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அரசியலமைப்புத் திருத்தங்கள், இன்றைய அரசியல்நிலை, அடுத்த நடவடிக்கை பற்றி இப் பொதுச்சபைக் கூட்டத்தில் ஆராயப்படும்.

## மட்டக்களப்பில் இரு மாபெரும் பொதுக் கூட்டங்கள்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் இரு மாபெரும் பொதுக் கூட்டங்கள் 24-5-78 சனிக்கிழமையும், 26-5-78 ஞாயிற்றுக்கிழமையும்நடைபெறுகின்றன. 24ம் திகதி சனிக்கிழமை மாலை பாட்டாளிபுரம் மைதானத்திலும், 25ம் திகதி ஞாயிறு காலை ஆரைப்பற்றையிலும் கூட்டணியின் பிரசாரக் கூட்டங்கள் நடைபெறுகின்றன.

# பௌத்த மதத்துக்கு மட்டும் அரசியலமைப்பில் மேலும் உயர்ந்த இடம்!

அரசியலமைப்புக்கு அரசாங்கம் கொண்டு வரவிருக்கும் திருத்தங்களின் படி வேறு எந்த மதத்துக்குமில்லாத உன்னத இடமும் பாதுகாப்பும் பௌத்த மதத்துக்கு அளிக்கப்படவிருக்கிறது.

"In the sphere of religion, the pre eminent place accorded to Buddhism as the religion of the vast majority of the people will not only be safeguarded but also be renderd inviolable. This will be ensured by providing explicity that no change in its status can be made except with the explicit consent of the people"

"மதத்தைபொறுத்தவரை பெரும்பான்மை மக்களின் மதமான பௌத்த மதத்துக்கு தரப்பட்டுள்ள முதன்மை ஸ்தானம் பேணிப்பாதுகாக்கப்படுவதுமட்டுமல்ல—அது எக்காலத்தும் மாற்ற முடியாததாகவும் இருக்கும். மக்களின் தெளிவான அனுமதியை பெறாமல், வேறுவகையிலும் பௌத்த மதத்துக்கு வழங்கப்பட்டுள்ள இந்த முதன்மை நிலையையாரும் மாற்ற முடியாது என்று திட்டவட்டமாகவரையறை செய்யப்படவிருக்கிறது".

இவ்வாறு டைம்ஸ் ஆப் சிலோன் (18-6-78) ஒருசெய்தியை வெளியிட்டுள்ளது. தார்மீகஅரசின்கீழ்பௌத்த மதத்துக்கு வழங்கப்படும் இதே உரிமை இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவமதங்களுக்கு இல்லை!

தனிப் பௌத்த சிங்கள நாடு அங்கே உருவாகிறது—

இந்து, கிறிஸ்தவம், இஸ்லாம் மதங்களுக்கு ஓர் சமநிலையும் சமவாய்ப்பும் அளிக்கும் அதே சமயம் மதசார்பற்ற தமிழ் ஈழ அரசு ஒன்று இங்கே உருவாகட்டும்!

## ஆலோசனைச் சபைக்கு இப்போது விண்ணப்பிக்கலாம்

தமிழீழ விடுதலைப்புலிகள் தடைச்சட்டத்தின் கீழ் தடுப்புக்காவலிலும், விளக்கமறியலிலும் வைக்கப்பட்டிருக்கும் இளைஞர்களின் பிரச்சினை சம்பந்தமாக ஆராய்வதற்கு அரசாங்கம் இப்போது ஓர் ஆலோசனைச்சபையை நியமித்துள்ளது. எனவே இதில் சம்பந்தப்பட்ட இளைஞர்களின் விடுதலை தொடர்பாக மேற்படி ஆலோசனைச் சபைக்கு விண்ணப்பிக்கவும், மேற்கொண்டு இதுசம்பந்தமாக சட்ட நடவடிக்கையெடுக்கவும், சட்டத்தரணி திரு. சி. கதிரவேற்பிள்ளை பா. உ. அவர்களின் தலைமையில் ஓர் சட்டநிபுணர்குழு இயங்கிவருகிறது. எனவே தடுப்புக்காவலில் அல்லது விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் இளைஞர்களின் பெற்றோர், உறவினர், அல்லது பாதுகாவலர் திரு. சி. கதிரவேற்பிள்ளை பா. உ. அவர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கோரப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தபிரானே! புத்தபிரானே!!

புத்தபிரானே! புத்த பிரானே!!

நீ அவதரித்த கபில வஸ்துவிலிருந்து கொண்டு வரப்பட்ட புனித சின்னங்கள் இன்று (17-6-78) யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்படுகின்றன!

சிங்கள சிறீலங்காவில் உன் புனித சின்னங்கள் ஆங்காங்கே வைக்கப்பட்டிருந்தபோது, உன் உள்ளம் முள்ளின்மேல் நடப்பதுபோன்று எவ்வளவு தூரம் வேதனைப்பட்டிருக்கும் என்பதை நான் அறிவேன்!

உதட்டளவில் உன் போதனைகளைப் பின்பற்றுவதாகக் கூறிக்கொள்பவர்கள், தங்கள் உள்ளத்தில் நிறைத்துவைத்திருக்கின்ற இனத்துவேஷத்தையும், ஆதிக்க வெறி உணர்வையும் கண்டு கண்டு கண்ணீர் வடித்திருப்பாய் என்பது எனக்குத் தெரியும்!

சிங்கள நாட்டில், உன் புனித சின்னங்கள் ஊர்வலமாக எடுத்துவரப்பட்டபோது, 1977 ஆகஸ்டில் குரூரமாக வெட்டிக் கொல்லப்பட்ட பல நூற்றுக்கணக்கான தமிழர்களின் சடலங்கள் புதைக்கப்பட்டுக் கிடக்கும் கல்லறைகளை ஆங்காங்கே கண்டிருப்பாய்!

உன் உள்ளம் இரத்தக் கண்ணீர் வடித்திருக்கும்!

காட்டுமிராண்டித்தனமாகக் கயவர்களால் கற்பழிக்கப்பட்ட எங்கள் இளம் தமிழச்சிகள்வடிக்கும் கண்ணீர் உன் இதயத்தைச் சுக்குநூருக்கியிருக்கும்!

இடிக்கப்பட்டுக்கிடக்கும் தமிழர் கடைகளை— நொருக்கப்பட்டுக்கிடக்கும் தமிழர் வீடுகளை— வீதிக்கு வீதி கண்டிருப்பாய்!

25க்கு மேற்பட்ட இந்துக்கோவில்கள் அடித்து உதைத்து தரைமட்டமாக்கப்பட்டுக் கிடப்பதை அங்கேநீ பார்த்திருப்பாய்!

இந்துகடவுள் விக்கிரங்கள் பல தூள் தூளாக்கப் பட்டுக்கிடப்பதை கண்டிருப்பாய்!

அன்பையும், சகிப்புத் தன்மையையும், அடுத்தவரை நேசிக்கும் பண்பையும் போதித்த போதிமாதவனே!

உன்னைப் பின்பற்றுவதாகக் கூறிக்கொள்ளுபவர்கள் ஆடிய பயங்கர வெறியாட்டத்தின் விளைவுகளே இவையென்பதை அறிந்தபோது, உனக்கு நரகத்தில் நடப்பது போன்ற உணர்வு அங்கே ஏற்பட்டிருக்கும்!

காலிழந்த ஓர் ஆட்டுக் குட்டிக்காக கண்ணீர்வடித்த கருணைவள்ளல் நீ!

ஆனல், யாருக்குமே கெடுதி செய்யாத ஓர் அழகான மயிலைக்கூட, அது தமிழ்க் கோவிலைச் சேர்ந்தது என்பதற்காக துண்டு துண்டாக வெட்டிக்கொன்றிருக்கிறர்கள் உன் பக்தர்கள் என்று தம்மை அழைத்துக்கொள்ளும் படுபாவிகள்!

அன்பையும் அஹிம்ஸையையும் போதிக்க வேண்டிய புத்த விகாரங்கள், தமிழர்களைத் தாக்கிய குண்டர்களின் சதியாலோசனை கூடங்களாக மாறியதாக சன்சோனி ஆணைக் குழுவின்முன் சாட்சியம் கூறப்பட்டிருக்கிறது!

புனிதமான மஞ்சள் காவியை அணிந்து, உன் புகழுக்குரியதிருநாமத்தை உச்சரிக்கவேண்டிய புத்த துறவிகள், காடையர்களாகமாறிதமிழர்களுக்கு கல்லெறிந்த கதை சன்சோனி ஆணைக்குழுமுன் கூற பட்டதைக் கேட்டு நீ மனம் இடிந்திருப்பாய்!

இவையெல்லாவற்றையும் பார்த்தபோது, இந்தப் பாவ பூமியிலிருந்து என் புனித சின்னம் போனல் போதும் என்ற அளவுக்கு உன் உள்ளம் குமைந்து கொண்டிருக்கும் என்பதை நான் அறிவேன்!

தமிழீழத்தில், உன் 'சமயத்தை' உதட்டளவில் பின்பற்றுபவர்கள் இல்லாவிட்டாலும், உன்போதனைகளை தமிழர்கள் தங்கள் வாழ்வில் சாதனையாக கடைப்பிடிப்பதை பார்த்தபோது உன் மனம் சற்றுச்சாந்தியடைந்திருக்கும்!

புத்தபிரானே,!! புத்த பிரானே!!

அரசியலே வேண்டாம் என்று பதவியை ஒதுக்கி விட்டு துறவுபூண்டு காட்டுக்கு போனவன் நீ!

ஆனல், இங்கோ பௌத்தமதத்தை 'மட்டும்' அரசாங்க மதமாக்கி வைத்திருக்கிறர்கள் அரசியலுக்காக!

பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறித்தவம் ஆகிய நான்கு மதங்களுக்கும் சமநிலை கேட்டோம்— அரசு மதசார்பற்று இருக்க வேண்டுமென்று வற்புறுத்திஞேம்!

உன்னைப் பின்பற்றுவதாக கூறும் ஆட்சியாளர்களோ — பௌத்தத்தை மட்டும் உயர்ந்த இடத்தில் வைத்ததன் மூலம் ஏனைய மதங்களை தாழ்த்தி விட்டனர்!

இது உனக்கு கிஞ்சிற்றும் உடன்பாடனதல்ல என்பது உன்போதனையை சாதனையாகச் கொள்பவர்களுக்கு மட்டுமே தெரியும்!

நாங்கள் உன் மதத்தை எதிர்க்கவில்லை; ஆனல் ஒரு மதத்தை மட்டும் உயர்ந்த நிலையில் வைத்து ஏனைய மதங்களைத் தாழ்த்துவதையே கடுமையாக எதிர்க்கிறேம்!

மதம், மதமாக இருக்கட்டும்— அதை அரசியலுக்குள் இழுத்து களங்கப் படுத்தாதே என்கிறேம்!

ஒரு மதத்தை மட்டும்— அது புத்தமாகட்டும், இந்துவாகட்டும், இஸ்லாமாகட்டும், கிறித்தவமாகட்டும்-ஆதிக்க மதமாக்கி அதை மற்றவர்மீதுதிணிப்பதை எதிர்க்கிறேம்!

புத்தமதத்தை நாங்கள் எதிர்க்கவில்லை — சிங்களவர்கள் புத்தமதத்தை அறிவதற்குமுன்பே அதை அறிந்துகொண்டவர்கள் நாங்கள்!

ஆனல் புத்த மதப்போர்வையுடன் எம்மை அடக்கி ஆள அழித்தொழித்திட தமிழீழத்துக்குள் நுழையும் பௌத்த சிங்கள ஏகாதிபத்தியத்தை முழு மூச்சுடன் எதிர்க்கிறேம்!

புத்தபிரானே! புத்த பிரானே!

சிங்கள பௌத்த சிறீலங்கா, தமிழ்ஈழநாட்டை தனது ஆதிக்கப்பிடிக்குள் சட்டவிரோதமாக வைத்துக் கொண்டிருக்கிறது; தனது படைபலத்தை ஏவிவிட்டு, தமிழ் ஈழமக்களை அடக்கி யொடுக்கி ஆள்கிறது! ஆதிக்கம் செலுத்துகிறது.

யுத்தமே செய்யமாட்டேன் என்று சபதம் செய்து ஆயுதத்தைக் கீழேபோட்டான் அன்று அசோக மன்னன்!

ஆனல், யுத்தம் என்றல் யுத்தம், சமாதானம் என்றல் சமாதானம் என்ற ஆணவக் குரல், தார்மீகம் பேசும் பௌத்த சிங்களவர் ஆட்சியிலே இன்று கேட்கிறது!

சிங்கள பௌத்த ஏகாதிபத்தியத்திலிருந்து விடுதலை பெறவே தமிழீழ மக்கள் போராடிவருகின்றனர்!

தமிழ் மக்களின் நியாயமான, நீதியான இந்த சத்தியப் போராட்டத்தில், புத்தபிரானே! நீ தமிழர்கள் பக்கமே இருப்பாய் என்பது எனக்குத் தெரியும்!

ஏனெனில் அடுத்தவனின், அயலவனின்— உரிமையை மதிக்க வேண்டும்—அதை அபகரிக்கக் கூடாது என்று போதித்தவன் நீ!

போதிமாதவனே! நீ கண் கலங்கவேண்டாம்!

ஒன்றுமட்டும் உறுதியாகக் கூறுவேன்!

தமிழ் ஈழம் சுதந்திர நாடாகும்போது — அங்கு அன்பும், அருளும், கருணையுமே கோலோச்சும்!


சிங்கள் சிறீலங்கா உன் போதனைகளை மறந்து கோணல்வழி சென்றலும் உன் புனித கொள்கைகள் தங்கத் தமிழ் ஈழத்தில் நின்று நிலைத்துநிற்கும்!

புத்தபிரானே! நாம் மேற்கொண்டிருக்கும் புனித சுதந்திரப் போர் வெற்றிபெற உன் ஆசியை வழங்கு!

—கோவை

# "சுதந்திரத் தமிழ் ஈழத்திலேயே சாதிப்பாகுபாடுகளை ஒழிக்கமுடியும்"

## தேசியப் பேரவையில் உடுப்பிட்டி பா. உ! முழக்கம்!



"இலங்கைத் தீவு வெள்ளையராட்சியிடமிருந்து விடுதலைபெற்ற கடந்த 30 ஆண்டுகளில் இந்த நாட்டை ஆண்ட எந்த அரசாங்கமும் செய்யத் துணியாததை எமது தமிழர் விடுதலைக் கூட்டணி சாதித்துக் காட்டியிருக்கிறது.

"இன்றுடன் மூன்றுவதோ நான்காவதோ முறையாக அமைச்சர் (சிறில் மத்தியூ) தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியலுக்குள் சாதிப் பிரச்சினையை இச்சபையில் இழுத்திருக்கிறர். எந்த நோக்கத்துடன் இப்படி அவர் செய்கிறரோ நானறியேன். சாதிப்பிரச்சினை தமிழர்களிடத்துமட்டுமில்லை, சிங்களவர்களிடத்தும் இருந்துகொண்டிருக்கிறது. இதில் வித்தியாசம் என்னவென்றல், சிங்களப் பிரிவினருக்கு 1977வரை அரசியல் பிரதிநிதித்துவம் இருந்து வந்திருக்கிறது — தாழ்த்தப்பட்ட தமிழர்கள் என்று அழைக்கப்படுபவர்களுக்கு பிரதிநிதித்துவம் இல்லாமலிருந்துவந்திருக்கிறது.

ஒவ்வொரு முறையும் யூ. என். பி. ஆட்சியும்சரி, சிறீலங்கா ஆட்சியும் சரி தொகுதி நிர்ணயக்குழுவை அமைக்கும்போதெல்லாம், இப்போதைய தொகுதி அமைப்பின்கீழ் நேரடித் தேர்தலின் தாங்கள் அரசியல் பிரதிநிதித்துவம் பெற முடியாது என்பதை சிறுபான்மைத் தமிழர் பிரதிநிதிகள் எடுத்துக்கூறி வந்திருக்கிறர்கள். எல்லோரும் எமது கோரிக்கையை அமைதியாகக் கேட்டார்களே தவிர—எதுவும் நடைபெறவில்லை.

சிறீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கமும், ஐக்கிய தேசியக்கட்சி அரசும் சிறுபான்மைத் தமிழருக்கு வழங்கத் தவறியதை அதாவது அரசியல் பிரதிநிதித்துவத்தை கடந்த தேர்தலின்போது தமிழர் விடுதலைக் கூட்டணியே எமக்கு வழங்கியது. கடந்த தேர்தல் அதன் வரலாற்று முக்கியத்துவம் காரணமாக உலகின் கவனத்தை ஈர்த்தது. கடந்த 30 ஆண்டுகளாக அரசிலமைப்பில் தீவிர மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய சக்தியை கூட்டணி கொண்டிருக்கவில்லை.

சிறுபான்மைத் தமிழர்களுக்குகோட்டாக்கள் வழங்கப்படுவதில்லையென்று புகார் கூறப்பட்டது.யூ,என். பி. தனது ஆதரவாளர்களுக்கே கோட்டாவை வழங்குகிறது. சிறீலங்கா சுதந்திரக்கட்சியும் தனது உறுப்பினர்களுக்கே கோட்டா வழங்கியது. அப்படியிருக்கும்போது தமிழர் விடுதலைக் கூட்டணியும் தனது ஆதரவாளர்களுக்கே கோட்டா வழங்குவதில் என்ன தவறு என்று கேட்கிறேன்.

உங்களுக்கு சிறுபான்மைத் தமிழர்களின் கஷ்டங்களைத் துடைத்து அவர்களை கை தூக்கிவிடுவதில் உண்மையான அக்கறையிருக்குமா

— 3-ம் பககம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசுமீது அவநம்பிக்கைத் தீர்மானம் கொண்டுவருமாறு கோரிக்கை!

ஐக்கியதேசியக் கட்சி அரசுமீது எதிர்க்கட்சியாகிய தமிழர் விடுதலைக் கூட்டணி ஓர் அவநம்பிக்கைப் பிரேரணையை தேசிய அரசுப் பேரவையில் கொண்டுவர வேண்டுமென்று த.வி.கூ. பாராளுமன்றக் குழுவை கோரும் தீர்மானம் ஒன்று வவுனியாவில் நடைபெற்ற தமிழ் இளைஞர் பேரவையின் பொதுக் குழுவில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தமிழ்ஈழத்தின் அனைத்துத் தொகுதிகளிலிருந்தும் பிரதிநிதிகள் கலந்து கொண்ட தமிழ் இளைஞர் பேரவையின் இப் பொதுச்சபைக் கூட்டம் 11-6-78 ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் பேரவையின் தற்காலிக தலைவர் திரு. எஸ். இராசதுரை தலைமையில் நடைபெற்றது.

நாட்டு மக்களின்—விசேடமாக தமிழ் மக்களின் மனித உரிமைகளை மறுத்தும், அவர்களை அடக்கியொடுக்கி சித்திரவதை செய்ய வசதியாக பொலிசாருக்கு நிரந்தர அதிகாரங்களை அளித்து இலங்கைத்தீவை சர்வாதிகாரப் பாதையில் இட்டுச் செல்வதைக் கண்டித்தும், 1977ம் ஆண்டு இனக்கலவரத்தின் போது பாரதூரமான குற்றங்களை செய்ததாக புகார் செய்யப்பட்டு,

## தமிழ் இளைஞர் பேரவை தீர்மானங்கள்!

சன்சோனி ஆணைக்குழு முன்னால் குற்றம் சாட்டப்பட்டுள்ள திரு. அனு செனிவிரத்தினவுக்கு ஆணைக்குழுவின் தீர்ப்பு வருவதற்கு முன்பே பொலீஸ் மா அதிபர் பதவியைவழங்கியமையைக்கண்டித்தும்— இன்னும் இது போன்ற 12 காரணங்களுக்காக அரசுமீது அவநம்பிக்கை தெரிவிக்கும் தீர்மானத்தை கொண்டு வருமாறு இளைஞர் பேரவை கோரியுள்ளது.

தமிழ் இளைஞர் பேரவை பொதுச்சபைமேற்கொண்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு:-

● தமிழினத்திடையே புரையோடிப்போய் இருக்கின்ற, மனிதஉரிமைகளையே மறுக்கின்ற விதத்தில் அமைந்துள்ள சாதிஅமைப்பு முறையால் ஏற்படும் ஏற்றத் தாழ்வுகளை போக்கும் வகையில் ஒரு வெகுஜன இயக்கத்தை தமிழர் விடுதலைக் கூட்டணி ஆரம்பிக்க வேண்டும் என தமிழ் இளைஞர் பேரவை ஏகமனதாக தீர்மானிக்கிறது.

● தமிழர் விடுதலைக்கூட்டணி அமைப்பு வேலைகளை செய்யாத த.வி.கூ. அமைப்பாளர்கள் குறிப்பிட்ட காலத்துள் தாமாகவே அமைப்பாளர் பதவியினின்றும் விலகியவராக கருதப்படுவார் என த.வி.கூ. பொதுச்சபை தீர்மானிக்க வேண்டும்.

● த.வி.கூ. யுடன் அரசியல் கொள்கையில் மாறுபட்டுள்ளகட்சிகளையோஇயக்கங்களையோ, அவை 'தமிழ்ஈழம்' கோரிக்கையை முற்று முழுதாக ஏற்றுக்கொள்ளும் வரை த.வி.கூட்டணியில் இணைந்த இயக்கமாக சேர்க்கக் கூடாது.

● தேர்தல்விஞ்ஞாபனத்தில் கூறியுள்ளபடி தேசியப் பேரவையில் கலந்து கொள்ளும் அதே வேளை தமிழ் ஈழ தேசிய மன்றத்தை உடன் அமைத்து இயக்க நடவடிக்கைகளில் கூட்டணி இறங்க வேண்டும்.

● சிறையில்உள்ள தமிழ் இளைஞர்களை விடுதலை செய்யாத பட்சத்தில் உடனடியாக ஓர் ஹர்த்தால் நடத்த வேண்டும் என்று தமிழர் விடுதலை கூட்டணியை கோர வேண்டுமெனவும் 2 வாரங்களில் அவர்களது பதிலை பெற்றபின் த.இ.பே. மத்திய செயற்குழு அடுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

● 1977 இனக்கலவரத்தின் போது பாரதூரமான குற்றங்களை செய்ததாக அனு செனிவிரத்தின மீது புகார் சுமத்தப்பட்டு சன்சோனி கமிசன் முன்னால் விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே அவருக்கு பொலீஸ் படையின் அதி உயர் பதவியான பொலீஸ்மா அதிபர் பதவியை வழங்கியமையை தமிழ் இளைஞர் பேரவை மிக வன்மையாக கண்டிக்கிறது.

● தமிழினத்திடையேயுள்ள சமூகக் குறைபாடுகளை நீக்குமுகமாக தமிழ் இளைஞர் பேரவைஓர் ஆலோசனைச் சபையை அமைத்து சமூகக்— குறைபாடுகள் தொடர்பான விடயங்களை நேரடியாகவும், சாட்சியங்கள் மூலமும் ஆராய்ந்து அறிக்கையை த.இ. பேரவை மத்திய செயற்குழுவுக்கு வழங்கவேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

ஆலோசனைக்குழு

திரு. கனகமனோகரன் (சட்டத்தரணி) திரு. மா. கந்தசாமி, திரு. ப. இறைகுமாரன், திரு. சபா. செந்துராசா, திரு. வை. குணாளன்.

# "கலவரத்தினால் பாதிக்கப்பட்ட மூதூர் தொகுதி அகதிகளுக்கு உடனடி நிவாரணம் வேண்டும்"

## குடியரசுத் தலைவருக்கு அமிர் கடிதம்!

மூதூர்த் தொகுதியில் அண்மையில் இடம் பெற்ற கலவரத்தில் பாதிக்கப்பட்ட தமிழ் அகதிகளின் பரிதாப நிலையை எடுத்துக்காட்டியும் இவர்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்கப்படவேண்டும் என்று கோரியும் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், குடியரசுத் தலைவர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில் திரு. அமிர்தலிங்கம் கூறியிருப்பதாவது:-

மூதூர் தொகுயிலுள்ள தெஹிவத்தை; சங்குவேலி, புளியடிச்சேரலை, 6ம் குடியிருப்பு, ஆகிய பகுதிகளில் ஏற்பட்ட சேதத்தை நேரடியாக நானே கண்ட பினனர், பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிக்க உடனடியாக உதவியளிக்கவேண்டுமெனக் கேட்டு கடிதம்எழுத வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

எல். பீ; மூன்று குடியிருப்பிலுள்ள தெஹிவத்தைச் சந்தியிலிருந்த 12 தமிழர் வீடுகள்எரிக்கப்பட்டுள்ளன. தங்கம்மா என்ற ஒருவர் கொலைசெய்யப்பட்டதைத் தொடர்ந்தும், அதன்பின்பு வெசாக் தினத்தன்று குமாரசேகரம் என்பவர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்தும் இங்கு குழப்பம் ஆரம்பமாயிற்று. தமிழ் அகதிகள் எவரும் திரும்பிச்செல்லவில்லை, இம்மக்களுக்கு எவ்வித நிவாரணமும் அளிக்கப்படவில்லை. மூதூர் சம்பூர், போன்ற பகுதிகளில் பிறரின் கையை எதிர்பார்த்து இவர்கள் வாழ்கிறார்கள்.

சங்குவேலி, புளியடிச் சோலை ஆகிய இடங்களில் நூறு வீடுகளுக்குமேல் முற்றாக எரிக்கப்பட்டுள்ளன. அல்லது சேதப்படுத்தப்பட்டுள்ளன. 40 குடும்பங்களுக்கு மட்டுமே வீடுகளைத் திரும்பவும் அமைக்க நிவாரணம் அளிக்கப்பட்டிருக்கிறது. இலங்கைப் பிரஜைகள் அல்ல என்று காரணம் கூறி இவர்களில் பலருக்கு நிவாரணம் மறுக்கப்பட்டுள்ளது. இம்மக்களுக்கு புனர் வாழ்வளிக்க உடனடியாக ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

அரிப்பு என்ற இடத்தில் ஆறு வீடுகள் கொளுத்தப்பட்டுள்ளன. இதில் இருந்த மக்கள் அகதிகளாகக் கல்குடாத் தொகுதியிலுள்ள வாகரையில் இப்போது இருக்கிறார்கள். இவர்களுக்கு இப்போது உதவி அளிக்கப்படவில்லை.

நீலப்பளையில் ஆறு வீடுகளும், ஓர் இந்து ஆலயமும் கொளுத்தப்பட்டுள்ளன. பயமுறுத்தலினாலும் பலாத்காரத்தினாலும் அகதிகள் அவ் இடங்களுக்குத் திரும்பிச் செல்ல முடியாதிருக்கின்றது.

கிளிவெட்டிக்குச் செல்லும் நீர்ப்பாசன வாய்க்கால்களை தெகிவத்தை மக்கள் மறித்திருக்கின்றார்கள். மயிங்காமம் குளத்துக்குச் செல்லும் நீலப்பளை வாய்க்கால்களை தெகிவத்தை மக்கள் மறித்திருக்கின்றார்கள். மயிங்காமம் குளத்துக்குச் செல்லும் நீலப்பளை வாய்க்கால் நீலப்பளை மக்களால் மறிக்கப்பட்டிருக்கிறது. இந்த வாய்க்கால்களை துப்புரவாக்கி, நீர் ஓடும்படி செய்யவேண்டும். இதற்கான கட்டளைகள் நீர்ப்பாசன அதிகாரிகளுக்குப் பிறப்பிக்கவேண்டும்,

மூதூர் காவல் நிலையத்தில் போதியளவு தமிழ் காவல்துறைஅதிகாரிகள்இல்லாமையே அச்சமும் பீதியும் தமிழ்க் கிராமங்களில் நிலவுவதற்கு முக்கிய காரணமாகும்; மூதூர் காவல் துறை நிலையத்தில் இரண்டாவது காவல்துறை அதிகாரியாக ஒரு தமிழ் அதிகாரியை நியமிக்கவும், அங்குள்ள காவல்துறை படையில் அரைவாசிப்பேராவது தமிழ் பேசுபவர்களாக இருப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிளிவெட்டி, சங்குவேலி தமிழ் கிராமங்களை இணைத்துக் தெகிவத்தைச் சந்தியில் காவல்துறை நிலையம் அமைக்கப்படவேண்டும்."

—2-ம் பக்கத்தொடர்

னால், பல்கலைக்கழக அனுமதி மருத்துவக்கல்லூரி, அனுமதி, தொழில் நுட்பக் கல்லூரிகள், பயிற்சிக்கல்லூரிகள், நிர்வாக சேவை, எழுதுவினைஞர் சேவை, ஆகியவற்றில் ஒரு பகுதியை சிறுபான்மைத் தமிழர்களுக்காக ஒதுக்குவீர்களா?

பல ஆண்டுகளாக அவர்களுக்கு கல்வி வசதி மறுக்கப்பட்டுவருகிறது. ஆனால் நீங்களே அன்றுதொட்டு இன்றுவரை ஆட்சிபுரிகிறீர்கள். ஆனால் நீங்கள் எமது பிரச்சினையை தீர்க்க முயலவில்லை. எமது கையில் அதிகாரத்தைத் தருவீர்களானால் நாமே எமது பிரச்சினைக்கு தீர்வு காணுவோம். ஒரு தனித்தமிழ் ஈழத்தை நாம் அமைப்போமாகில், நாமே எமது பிரச்சினையை தீர்த்துக்கொள்ள முடியும், எரு சுதந்திரத் தமிழ்ஈழத்தின் கீழேயே அதிகாரம் எம்மிடம் இருக்கும். தமிழ் ஈழத்தை வழங்குவோமென்று நீங்கள் இங்குஉறுதி கூறுங்கள்.

டபிள்யூ. பி.வி. திசாநாயக்கா: நீங்கள் ஈழத்தை நிறுவ நாம் விடமாட்டோம்.

இராசலிங்கம்:- வடக்கில் நீங்கள் நிறுவிய சிங்கள பௌத்த பாடசாலைகளுக்கு நேர்ந்த கதியென்ன? அவைகள் இன்று மூடப்பட்டு விட்டன. என்ன நடந்தது என்று உங்களுக்குத் தெரியுமா? சிறுபான்மைத் தமிழர்கள் வடக்கிலிருந்து தெற்கே மாத்தறைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அவர்களை எப்படி நடத்தினீர்கள் என்பதும் உங்களுக்குத் தெரியும். அவர்கள் அழுதபடியே மீண்டும் வடக்கே ஓடிவந்தனர்.

ஒரு தனித் தமிழ் ஈழத்தில் அதிகாரம் எமது கையில் கிடைப்பதன் மூலமே எமது சமுதாய விடுதலையை பெற முடியும் என்பதே எமது கருத்தாகும்.

சமுதாய ஏற்றத்தாழ்வுகள் சிங்களவர்களிடையேயும் தமிழர்களிடையேயும் உண்டு. எனவே இதில் தமிழர்களை மட்டும் பரிகசிப்பதில் எதுவித அர்த்தமுமில்லை. 28.5 78 'வீக்எண்ட்' பத்திரிகையில் வெளியிடப்பட்டிருந்த ஒரு செய்தியின் தலைப்பை இப்போது வாசிக்கிறேன்.

"திண்டாச்சாதியாக ரொடியர்கள் இன்னும் எத்தனை ஆண்டுகள் இருக்க வேண்டும்?" என்பதே அத்தலைப்பாகும்.

வி, தர்மலிங்கம்:- தாழ்த்தப்பட்ட ஒருசிங்களப்பெண் காதணி அணிந்து செல்லவோ அல்லது ஒரு மனிதன் பணியன் அணிந்து செல்லவோ முடியாது. அவ்வாறு யாழ்ப்பாணத்தில் நடப்பது இல்லை.

இராசலிங்கம்:- தமிழர்களாக இருந்தாலும், சிங்களவர்களாக இருந்தாலும், சமுதாய ஏற்றத்தாழ்வுகள் அகற்றப்படவேண்டுமே தவிர, அதற்கு ஆக்க பூர்வமான வேலைகளில் அரசு ஈடுபட வேண்டுமே தவிர,— அதையிட்டு பெரிய சத்தம் போடுவதும், அதையே தனது தற்பாதுகாப்புக்காக அமைச்சர்கள் உபயோகிப்பதும் நிறுத்தப்படவேண்டும்!

(8.6.78ல் தேசியஅரசுப்பேரவையில் நிகழ்த்திய உரை)


**சுதந்திரன் சந்தா**

ஓராண்டுச் சந்தா ரூ. 50.00
அரை ஆண்டு ,, ரூ. 25.00

பணம் அனுப்பவேண்டிய முகவரி:-

"சுதந்திரன்"
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணவன் ஆலையில் பரிதாபமாக அடிபட்டான்

# இளம்மனைவியோ வீட்டில் கற்பழிக்கப்பட்டாள்!

பொல்கொல்லை மின்தறி நெசவாலையில் கழிவு நூல்களை வாங்கி விற்று வரும் ஜோசப் மைக்கல் என்பவர் 1977 ஆகஸ்ட் 19ம் திகதி அவ்வாலைக்கு வழமைபோல் நூல்வாங்க ரூபா 1 300/- பணத்துடன் சென்ருர். அங்கு பொதுமுகாமையாளரைச் சந்தித்து அனுமதி எடுப்பதற்கு காத்து நிற்கும்போது நெசவாலை ஊழியர்கள் வந்து "நீர் ஏன் இங்கு நிற்கிறீர்?" என்று கேட்டனர். தான் முகாமையாளரைக்காண நிற்பதாக அவர் கூறினுர். நீ ஒரு தமிழனு? என்று கேட்டார்கள். ஆம் என்ருர் ஜோசெப். உடனே மிருகத்தனமாக அவரைத் தாக்கினுர்கள்.

ஸ்ரோர்கீப்பர் ஸ்டீபனின் அறைக்குள் ஜோசெப் அடைக்கலம் புகுந்தார். தொடர்ந்து அங்கு சென்று தாக்கினுர்கள். வெளியேறி ஓடியபோது துரத்தித் துரத்தி சப்பாத்துக்கால்களால் அவ்வூழியர்கள் தாக்கினுர்கள். அருகிலுள்ள ஒரு பறங்கியர் வீட்டில் தஞ்சம்புகுந்த திரு. யோசப்பை, தொடர்ந்து தாக்குவதற்கு நெசவாலை ஊழியர்கள் திரண்டு வந்தனர். அவர்களுடன் நெசவாலை உதவி முகாமையாளரும் வந்திருந்தார்.

பறங்கி வீட்டில் மறைவு தேடியிருந்த ஜோசப்பை "வாடா தமிழா வெளியே என்று கூக்குரல் போட்டு சத்த மிட்டனர். தமிழரை ஒழித்துவைத்திருக்கும் பறங்கி வீட்டையும் உடையுங்கள் என்று உதவி முகாமையாளர் திரு. குணசேகராவும் சேர்ந்து சத்தமிட்டாராம்.

பறங்கிப் பெண் திரு. ஈ, என். தீனீஸ், பெரும் உள்ளம் படைத்த பெண், எப்படியேனும் அடைக்கலம் புகுந்த தமிழனைப் பாதுகாக்க வேண்டுமென உதவி முகாமையாளர் திரு. குணசேகராவை மன்ருடி அவ்வூழியர்களை அழைத்துச் செல்லுமாறு பணிவாகக் கேட்டும் அந்த பொறுப்பு வாய்ந்த சிங்கள உத்தியோகத்தர் தமிழனைக் முடியாமல் போவதில்லை யென்று, பிடிவாதமாக நின்று அத் தமிழனைத் தாக்குவித்த சம்பவத்தை சன்சோனி ஆணைக்குழு முன் கூறும்போது தாக்குதலுக்குள்ளான தமிழரான ஜோசெப் கண்ணீர் விட்ட காட்சி ஆணைக்குழுவின் உள்ளத்தை உருக்கி விட்டது.

அது யார் அந்தக் குணசேகரா? உடனே அவரை இங்கு அழைப்பியுங்கள் என்று திரு. சன்சோனி ஆணையிட்டார். அக்குணசேகரா இன்னும் சேவையில் இருப்பதை அறிந்து திரு. சன்சோனி ஆச்சரியப்பட்டார்.

இவ்வாறு தாக்கப்பட்ட ஜோசப்பை தொடர்ந்தும் அவ்வூழியர்கள் துரத்தியடித்து பொல்கொல்லை அணைக்கட்டிற்குள் தள்ளிவிட்டார்கள், மாண்டிருப்பார் எனக் கருதி விட்டுச் சென்று விட்டார்கள். ஒருமாதிரி தப்பித் தவறி தனது வீட்டுக்குச் சென்று அங்கு நடைபெற்ற சம்பவத்தை அறிந்து ஏக்கமுற்ருர் ஜோசெப்.

வீட்டில் தனியாக இருந்த அவரது மனைவி சவுந்தர மேரி (வயது 25) சிங்களவர்களால் மானபங்கப்படுத்தப்பட்டு கத்திமுனையில் கற்பழிக்கப்பட்டாள் என்பதை மயக்கநிலையில்இருந்த தமது மனைவியேகூறியபோதுவெந்த புண்ணில் வேல்பாய்ந்தது போல் தமக்கு இருந்தது என சன்சோனி ஆணைக்குழு முன் வெட்கத்தையும் துக்கத்தையும் மறந்து உண்மை நிலையை ஜோசெப் கூறிய போது அங்கிருந்தோர் உள்ளம் எல்லாம் கலங்கியது.

கணவன் நெசவாலையில் தாக்கப்பட இளம் மனைவி வீட்டில் பலாத்காரமாக கற்பழிக்கப்பட்ட இச்சம்பவத்தைப் போன்று பல நிகழ்ச்சிகள் கண்டியில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சன்சோனிக் ஆணைக்குழு, முன்னிலையில் அம்பலமாகி வருகிறது.

(தொகுப்பு:- 'சம்பத்')

---

## அண்ணு உருவப்படம் திரை நீக்கம்

அறிஞர் அண்ணு தமிழ் நாட்டில், தமிழரை தட்டியெழுப்பிய மா பெரும் தமிழ்த்தலைவர். தமிழுக்காகவும், தமிழர்க்காகவும், தமிழ் நாட்டிற்காகவும் அவரது முயற்சியும், தியாகமும் அளப்பரியது. அப்படிப் பட்ட தியாக முயற்சியின், தாக்கம் தான் இலங்கையில் தமிழர்களாகிய எமக்கும், எமது மொழியிலும் உரிமையிலும் பற்றுண்டாகியது எனவேதான், ஈழத் தமிழரின் தலைமைச் செயலகத்தில் அவரது உருவப்படம் எப்பொழுதோ திரை நீக்கம் செய்யப்பட்டிருக்க வேண்டும், காலம் தாழ்த்தி செய்யினும் இச் செயலகத்தில் பேரறிஞர் அண்ணுவின் படம் இடம் பெற்றிருப்பது சாலவும் பொருத்தமானது.

அத்துடன் எமது இயக்கத்தில் பல வருடம் ஊழியஞக, உரிமைப் போரில் அல்லும் பகலும் அயராது உழைத்த திரு. சண்முகநாதனைக் (மணி) கொண்டு அண்ணு படத்தை திரை நீக்கம் செய்வது மிகவும் மகிழ்ச்சியும் பெருமையும் உடைய விடயமாகும்"

இவ்வாறு சட்டத்தரணி திரு. சா.செ. சந்திரகாசன் தமிழக மாபெரும் தலைவர் அமரர் அண்ணுவின் திரு உருவப் படத்திறப்பு விழாவில் கலந்து கொண்டு கூறினுர். இக்கூட்டத்திற்கு, யாழ் பா.உ. யோகேஸ்வரன் அவர்கள் தலைமைதாங்கினுர்.

---

## கலை விழா

இலங்கை பல்கலைக் கழகம் கட்டுப்பெத்தை வளாகத் தமிழ்ச் சங்கம்

இடம்: புதிய கதிரேசன் மண்டபம், பம்பலப்பிட்டி.

நாள்: 23-6-78 வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணி.

பிரதம விருந்தினர்:
திரு. சூசைதாசன் (தே. உ. மன்னுர்)

தலைமை:
திரு. மதுரநாயகம்

நிகழ்ச்சிகள்:
மலர்வெளியீடு: 'நுட்பம் 77'

கவியரங்கம்—
"வீசுவது தென்றலல்ல"
தலைமை:
கவிஞர். க. இராஜமனேகரன்

பங்குகொள்வோர்:
கவிஞர். வெ. இளங்கோ.
கவிஞர். ஆ. திருவள்ளுவர்
கவிஞர். புதுவை இரத்தின (துரை

நாடகம்—
(1) அரசியல் வாதிகள்
(2) விசித்திர மனிதர்கள்

நடனம்—
விஜயாம்பிகை இராமசாமி

நவீன நகைச்சுவைக் கதா கலாட்சேபம்—
"அம்பிகாபதி"

---

## 'விடுதலையின்முன் சலுகைகள் தூசு"

—செல்லத்தம்பு

"ஒரு விடுதலை இயக்கத்தின் அடிப்படை நோக்கம் சலுகைகளும், வேலைவாய்ப்பும், ஆசிரியர், அப்போதிக்கரி மற்றும் அரசாங்கப் பதவிகளும் பெறுவது அல்ல. அத்தகைய எண்ணம் விடுதலையை இலட்சியமாக கொண்டவர்களுக்கு ஏற்படக் கூடாது."

மேற்கண்டவாறு முல்லைத்தீவு த.வி.கூ. கிளை தொடக்க கூட்டத்தில் பேசிய திரு. சே.மா. செல்லத்தம்பு பா.உ. குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில்—

"தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண தமிழ் மக்களிடையே ஒரே இயக்கமே உருவாக வேண்டும் என்ற கருத்தின்படி தமிழர் விடுதலைக் கூட்டணி உருவாக்கப்பட்டது. இது உருவானபின்னர், சுதந்திரத் தமிழ்ஈழக்கொள்கையை ஏற்காத எவருக்கும், எந்தக் கட்சிக்கும், அல்லது எந்த இயக்கத்துக்கும் தமிழர்களின் அரசியலில் இனி இடமில்லை. தமிழ் ஈழ இலட்சியம் நமது இறுதி மூச்சு. இப்புனித இலட்சியத்தின் முன்னுல் சலுகைகள் வெறும் கால் தூசு." என்ருர்.

தலைவராக திரு. சே.மா. செல்லத்தம்புவும், துணைத் தலைவராக திரு. ஆ. குலசேகரமும், செயலாளராக திரு. கா.அ. அற்புதராஜாவும், துணைச்செயலாளராக எவ். எக்ஸ். ஜெயசீலன் அவர்களும், பொருளாளராக பொ. செல்வநாயகமும் கணக்காளராக திரு. செ. தேவதாஸ் அவர்களும், கூட்டணி மத்திய பொதுச்சபை உறுப்பினர்களாக ஐவரும் தெரிவு செய்யப்பட்டனர். முல்லைத்தீவு த.வி.கூ. கிளையின் லிகிதராக திரு. வே. செந்திநாதன், தலைவரால் நியமிக்கப்பட்டார்.

---

● —1-ம் பக்கத் தொடர்

ருர்கள். அவர்கள் சந்திக்கும்போது: எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும் எங்கள் தலைவர் திரு. அமிர்தலிங்கம் அவர்களிடம் என்ன கூறுகிருர்?

"நான் இப்போது எதிர்க் கட்சித்தலைவர் தான்; ஆனுல் நான் அடுத்த முறை மட்டுமல்ல—ஒருபோதுமே ஆளுங் கட்சித்தலைவராக வர முடியாது; ஏனெனில் நான் ஒரு தமிழன்; வேருேர் நாட்டைச் சேர்ந்தவன்; எனது தமிழ் ஈழ நாடு, சிங்கள சிறீலங்காவுடன் சட்டவிரோதமாகவும், சரித்திரத்திற்கு முரண்பாடாகவும், இணைக்கப்பட்டிருக்கிறது; அதைவிடுவித்து தமிழ் ஈழத்தின் சுதந்திரத்தை மீட்கவே நான் இங்கு இருக்கிறேன்" என்று கூறி வருகிருர். இதனுல் எமது சுதந்திரக் கோரிக்கைபற்றி உலகம் அறிந்துகொண்டு வருகிறது. சர்வதேச அரங்கில் எமது கோரிக்கை பற்றி பேசுகின்ற நிலை தோன்றியுள்ளது.

### கலவரம்தந்த படிப்பினை

அடுத்ததாக, 1977 ஆகஸ்டில் நடைபெற்றதமிழ்—சிங்கள கலவரமும் ஒரு அடிப்படை உண்மையை தெளிவுபடுத்திவிட்டது. அக்கலவரத்தின் போது நடைபெற்ற சம்பவங்களை சன்சோனி ஆணைக்குழுவின் முன்னுல் நாம் காணும்போது இந்தநிலை மேலும் உறுதியாகிறது. அதாவது. சிங்களவர்களும், தமிழர்களும் சேர்ந்து ஒரே நாட்டினராக இனிமேல் வாழ முடியாது என்ற அப்பட்டமான உண்மை தான் அது. 1977 ஆடிப் பொதுத்தேர்தலின் போது தமிழ் ஈழ சுதந்திரக்கோரிக்கையை எதிர்த்தவர்கள்கூட ஆவணிக்கலவரத்தின் பின் தமிழ்ஈழம் தவிர தமிழர்கள் வாழ்வதற்கு வேறு வழியில்லையென்ற இறுதி முடிவுக்கு இன்று வந்துவிட்டார்கள்.

மலையகத் தமிழர்கள்—இலங்கைக் குடியுரிமை பெற்றவர்களும் சரி, பெருதவர்களும்சரி—ஒன்றில் இந்தியாவுக்கு திரும்ப வேண்டும், அல்லது தமிழ் ஈழத்தில் வந்து தங்கள் வாழ்வை அமைத்துக்கொள்ள வேண்டும் என்ற முடிவுக்கு இன்று வந்து விட்டார்கள். சிங்கள அரசியல்தலைவர்கள் பலரும் கூட வெளியே பகிரங்கமாக ஒப்புக்கொள்ளாவிட்டாலும் கூட, தனித்தனியே எம்முடன் பேசும் போது, தமிழர்களும், சிங்களவர்களும் சேர்ந்துவாழ்வது எதிர்காலத்தில் முடியாத காரியம்தான் என்று கூறுகிருர்கள், இதுவே இன்றுள்ள நிலை.

இந்தநிலையில் நாம் நமது விடுதலையை பெற்றுக் கொள்ளவிடாப்பிடியுடனும் உறுதியாகவும் இருக்கவேண்டும்.

### பிரிவினையல்ல சுதந்திரம்

ஒன்ருக எப்போதும் இருந்து வரும் ஒரு பொருளை இரண்டாகப் பிரிக்கும்படி கேட்பது தான் பிரிவினை எனப்படும். நாம் கேட்பது பிரிவினையல்ல; தமிழ்ஈழத்தின் சுதந்திரத்தையே வேண்டிநிற்கிருேம்.

தமிழ் ஈழமும், சிங்கள சிறீலங்காவும், சட்டரீதியாகப்பார்த்தாலும். சரித்திர ரீதியாகப் பார்த்தாலும் இரண்டு வெவ்வேறு நாடுகளே தவிர ஒரே நாடு அல்ல. 1972ம் ஆண்டு புதிய அரசியலமைப்பு தயாரிக்கப்பட்டபோது தமிழ்ஈழப்பிரதிநிதிகள் அதிலே பங்குபற்றவில்லை. எனவே அந்த அரசியல் சட்டம் எம்மைக்கட்டுப்படுத்தாது. இதை மொரார்ஜிதேசாயும் மற்றவர்களும் உணர வேண்டும்.

இன்று வட இந்தியாவிலிருந்து புத்தரின் புனித கபிலவஸ்து சின்னங்கள் தமிழ் ஈழத்துக்கு வந்திருக்கிறது. இது ஒரு நல்ல சகுனம்.

புனிதசின்னங்கள் இப்போது வந்தது போலவே நமது சுதந்திரத்தை மீட்டுத்தரவும், இந்தியாவே எதிர்காலத்தில் முன்வரும் என்பதையே புத்த சின்னம் இந்தியாவிலிருந்து தமிழ்ஈழத்துக்கு வந்துள்ளது எடுத்துக் கூறுகிறது.

இன்று தேசாய் எதையாவது கூறலாம். அது ஒன்றும் நிரந்தரமானதுமல்ல —அல்லது தேசாயே நிரந்தரமானவருமல்ல; மற்ற நாடுகளின் உள்நாட்டுப் பிரச்சினைகளில் தலையிடக்கூடாதென்று கூறிக்கொண்டிருந்த திருமதி இந்திராதான் கடைசியில் பாகிஸ்தானின் ஒரு பகுதியாயிருந்த வங்க தேசத்துக்கு தனது படைகளை அனுப்பி வைத்து, அந்த மக்கள் சுதந்திரம் பெற உதவிசெய்தார், எனவே சர்வதேச அரசியலில் இப்படியான விஷயங்களில் நிலையான கொள்கை என்று ஒன்று கிடையாது.

எனவே புத்த சின்னங்கள், தமிழ் ஈழத்தின் சுதந்திரத்தை வழங்கக்கூடிய மனப்பக்குவத்தை சிங்கள பௌத்தர்களுக்கு ஏற்படுத்துமாக! புத்த சின்னங்கள் இங்கு வந்ததைத் தொடர்ந்து, நமது புனித சுதந்திரத்தை மீட்டெடுக்கும் விடுதலைப் போராட்டம் வெற்றி நடைபோடுமாக!"

—இவ்வாறு திரு. சி. கதிரவேற்பிள்ளை பேசினுர். இக் கூட்டத்தில் திரு. அ. அமிர்தலிங்கம் பா. உ, திருமதி அமிர்தலிங்கம், திரு. கோவை மகேசன், க. சின்னத்துரை. எஸ், கே. மகேந்திரன் ஆகியோருட்பட பலர் பேசினர்.

---

"ஒலிவ் ஸ்நானப்பவுடர்"

எண்ணெய் முழுக்குக்கு சிறந்த
ஒலிவ் ஸ்நானப் பவுடரை வாங்கி உபயோகியுங்கள்.
தலைமயிரிலுள்ள அழுக்கு. பேன், சொடுகு
ஆகியவற்றை நீக்குகிறது.

ஓர் மில்க்வைற் தயாரிப்பு

---

இப்பத்திரிகை கொழும்பு-12, 194 ஏ, பண்டாரநாயக்க, வீதியிலிருக்கும் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் நிறுவனத்தாரால் 1978ம் ஆண்டு ஜுன் மாதம் 21-ம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது! அச்சுப் பதிப்பு: வஸ்தியன் அச்சகம் பிரதான வீதி, யாழ்ப்பாணம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org